பங்குனி 22, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 5, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் ''

யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர் தம்மோடு பழகியவர் தனக்கு நஞ்சு இடக் கண்டும் அதை உண்டு அமைவர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெண்களுக்குப் பட்டப் படிப்பு துவங்குதல்.

*1668 திரு. கோ. பூவராகன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெண்களுக்குப் பட்டப் படிப்புத் துவங்க அரசு பல்கலைக் கழகத்தை வற்புறுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஏற்கனவே பட்டப் படிப்பு இருந்தது. எந்தக் காரணத்தாலே அது மூடப்பட்டு விட்டது? எந்த வருடத்திலே மூடப் பட்டது? அரசாங்கம் மூடவேண்டும் என்று அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஏதாவது உத்திரவு பிறப்பித்ததா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்கள், அங்கேயுள்ள ஆட்சிக் குழு தருகிற ஆலோசனையின் அடிப்படையில் அந்தந்தக் காலத்தி

னுடையத் தேவையைக் கருதி உருவாக்கப்படுகின்றன. பட்டப் படிப்பு வகுப்புகளும் பட்டத்திற்கு முற்பட்ட படிப்பு வகுப்பு களும் அந்தப் பல்கலைக் கழகத்திலே ஒரு காலத்திலே இருந்தன என்றுச் சொன்னாலும், மேல் பட்டப் படிப்புகளும், தொழில் படிப்புகளும் உருவாக்குகிற ஒரு நிலைமை ஏற்பட்டபோது, தொடர்ந்து வேறு பல கல்லூரிகள் இருக்கிற காரணத்தால், மேல் பட்டப் படிப்பு அதே போல் ஆய்வுப் படிப்புகள், ஆகியவை அந்தப் பல்கலைக் கழகத்திலே ஏறத்தாழ 5,000 பேர்களுக்கு மேல் படிக்கக்கூடிய அளவுக்கு அதிகமான அளவில் இடம் பெற் றிருக்கின்றன. எனவே, அது பல்கலைக் கழகத்தினுடைய முடிவு என்ற அடிப்படையில்தான் தேவைக்கு ஏற்ப செய்யப்படுகிற மாற்றத்திலே இடம் பெறுகிறது.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்தினுடைய விதியில் எத்தனை மாணவர்கள் சேர்கிறார்களோ, அதிலே 75 சதவீதம், குறைந்தபட்சம் அந்த உணவு விடுதியிலே தங்கிப் படிக்க வேண்டிய நியதி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்திலே பயின்றவர்கள், அங்கே இருந்தவர் கள், அந்த ஊர்க்காரர்கள், அடிக்கடி சென்று வருகிறார்கள். இப்போது நிதியில்லை என்றுகூடச் சொல்ல முடியாது. இது வசதி இல்லை என்று கூட சொல்ல முடியாது. தற்போது பெண் களுக்குத் தனியாக அதிக கவனம் செலுத்துகின்ற இந்தச் சம யத்திலே பேராசிரியர் அவர்கள் வற்புறுத்தினால், இந்த ஆண்டே அவர்கள் அந்தப் பட்டப் படிப்பை அங்கே துவங்க வசதியாக இருக்கும். மிகவும் பின்தங்கிய மாவட்டத்திலே ஒரு நல்ல நிலையை இது உருவாக்கும் என்பதாலே, இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொருவருடைய நியாயமான வேண்டுகோளுக்கும் எந்த ஒரு அமைப்பையும் எளிதாகச் செவிசாய்க்க வைக்க முடியாது. வேண்டுகோள் நியாயமாக இருக்கலாம். இப்போது தென் ஆற் காடு மாவட்டத்திலே கடலூரிலே ஒரு தனியார் மகளிர் கல்லூரி இருப்பதாக நான் அறிகிறேன். விழுப்புரத்திலே ஒரு தனியார் கல்லூரி ஒன்று மகளிருக்கென துவங்கப்பட்டு இருக்கிறது. எல் லாவற்றையும்விட பட்டப் படிப்பு நடத்தவேண்டும் என்றால் உதவித் தொகையை, அதாவது ' ' எய்டட் காலேஜ் ' ' என்ற முறையில் உதவித் தொகையைத் தர வேண்டிய நிலைமை அரசுக்கு இருக்கிறது. எனவே, அந்த முறையிலே அவர்களே ஒத்துக்கொண்டு செய்வதாக இருந்தாலுங்கூட அரசு ஆலோசிக்க வேண்டும்.

1990 ஏப்ரல் 5]

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், ஏனைய பல்கலைக் கழகங்களிலும் பணிபுரியக்கூடிய ஹாஸ்டல் ஊழியர்கள் தங்களை பல்கலைக் கழக ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் என்றும் பல்லாண்டுக்காலமாகப் பணிபுரியக்கூடியவர்கள் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்றும் கோரி, மகஜரை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்து, மேலும், மேலும், மகஜர்களை முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அண்மையிலே அவர்கள் தொடர் உண்ணாவிரதம் சென்னையிலே இருந்தார்கள். அவர்களுடைய பிரச்சினையை அரசு தீர்க்க அவர்களுக்கான ஒரு சட்டத்தை கொண்டுவர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினை மூலக் கேள்வியோடு தொடர் உடையது அல்ல. இருந்தாலும் அவர்களுக்கும் எனக்கும் அக்கறை உள்ள பிரச்சினை, முடியுமா என்ற கேள்வியிலேதான் நாங்கள் இரண்டு பேர்களும் இருக்கிறோம்.

சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழக ஊழியர்களுக்கு ஊதியம் வரையறுத்தல்.

*4568 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகத்தில் 1982-லிருந்து பணிபுரியும் 200 பட்டதாரி உதவியாளர்களுக்கு ஊதியம் வரையறுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (Societies Registration Act)படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். எனவே, பதிவுச் சட்டத்தின், விதிகள் விதிமுறைகளை ஒட்டியே இயங்க முடியும். இக்கழகத்தின் பணியாளர்கள், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களாக இல்லை. பணியாளர்களின் நியமனமும் சட்ட நிபந்தனைகளும் உதவி மற்றும் ஆலோசனைக் கழக விதிமுறை 17-ன்கீழ் வரையறுக்கப்பட்டவாறு இதன் தலைவரால் (தமிழ்நாடு மாநில ஆளுநர்) நிர்வாகக் குழுவின் பரிந்துரையின் பேரில் முடிவு செய்யப்படுகிறது.